மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
supeedsam.com

24.11.2022 வியாழக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

# தேர்தலை ஒத்திவைக்க எனக்கு அதிகாரம் இல்லை



தாம் தேர்தலை ஒத்திவைக்க முயலவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். பாராளுமன்றில் இன்று உரையாற்றிய அவர், தேர்தலை ஒத்திவைக்க தமக்கு அதிகாரம் இல்லையென்று குறிப்பிட்டார். எனினும், தற்போதைய தேவை பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பும் பணியாகும் எனவும் அவர் தெரிவித்தார். மனித உரிமை மீறல் விடயங்களுக்குள் அராஜகம் மற்றும் வன்முறை என்பன உள்ளடங்குவதில்லை. எனவே அவற்றுக்கு இடம் தரமுடியாது எனவும் ரணில் குறிப்பிட்டார்.

இதேவேளை பாதுகாப்பு செலவீனங்கள் அதிகரித்துள்ளமை குறித்து கருத்துரைத்த அவர், படையினருக்கு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் இந்த செலவீனங்கள் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டார். அதேவேளை, பாதுகாப்பு விடயங்களில் புதிய உத்திகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## மக்கள் கருத்துக்கு செவிசாய்க்காததன் விளைவுகளை ராஜபக்சக்களிடம் இருந்து கற்றுக் கொள்ளுங்கள்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ஜனாதிபதியிடம் தெரிவிப்பு



பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட்டு புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். நடைமுறையிலுள்ள 13 ஆவது திருத்தத்திற்கமைய அதிகாரங்களைப் பகிரும் நிலைப்பாட்டில் ஐக்கிய மக்கள் சக்தி உறுதி. எதிர்வரும் சுதந்திர தினத்திற்கு முன்னர் தமிழர் பிரச்சினைக்கு யதார்த்த ரீதியாக தீர்வு வழங்க ஜனாதிபதி முயற்சித்தால் அதற்கு எமது முழுமையான ஆதரவை வழங்குவோம். IMF உடன் ஏற்படுத்தப்பட்ட ஊழியர் மட்ட உடன்படிக்கையை சபைக்கு சமர்ப்பியுங்கள். IMF உடன்படிக்கையின்றி குழு நிலை விவதாங்களை நடத்திப் பயணில்லை. தேர்தலை நடத்த மாட்டோம் என ஜனாதிபதி கூறியதில் தமக்கு ஆச்சரியமில்லை எனவும், தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படாமல் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக பாராளுமன்றத்திற்கு வந்து, முன்னாள் ஜனாதிபதியின் விருப்பத்தின் பேரில் பிரதமராகி, பின்னர் பாராளுமன்ற பெரும்பான்மையின் விருப்பத்தின் பேரில் ஜனாதிபதியானவர் என்பதனால் அவருக்கு தேர்தலொன்றின் பெறுமதி புரியவில்லை எனவும்,மக்களின் வாக்குரிமை தொடர்பில் அவருக்கு நம்பிக்கை இல்லை எனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,அவரது பேச்சுக்கள் குறித்து தான் பொருட்படுத்தவில்லை எனவும் தெரிவித்தார். 69 இலட்சம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியானவர், 68 இலட்சம் வாக்குகளைப் பெற்று பிரதமரானவர், நிதியமைச்சரானவர் உள்ளிட்டோர்,திடீரென இருந்த இடத்தைக் கூட மறந்து வீட்டுக்குச் செல்ல நேர்ந்தது தேர்தலினால் அன்றி மக்கள் போராட்டாத்தினாலையே விரட்டப்பட்டதாகவும்,எனவே தற்போதைய ஜனாதிபதியும் கூட இதனை மறந்துவிடக் கூடாது எனவும் எதிர்க்கட்சித்

02

## பட்டம் மற்றும் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களே பாடசாலை வகுப்புக்கு அனுப்பப்படுவார்கள்



தேசிய கல்விப் பல்கலைக்கழகத்தில் நான்கு வருட பட்டம் மற்றும் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களே பாடசாலை வகுப்புக்கு அனுப்பப்படுவார்கள் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த இன்று (24) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சபை நடவடிக்கைகள் ஆரம்பமாகி கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## அரசியலமைப்புச் சபைக்கு சித்தார்த்தனின் பெயர் பரிந்துரை



அரசியலமைப்புச் சபைக்கு சிறு, மற்றும் சிறுபான்மை தரப்பிலிருந்து பிரநிதித்துவம் செய்வதற்காக புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனின் பெயரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பரிந்துரை செய்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழு கூடிய வேளையில், அரசியலமைப்புச் சபைக்கான பிரநிதித்துவத்தினை பெற்றுக்கொள்வது பற்றி ஆராயப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இவ்வாறான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நீண்ட நாட்களுக்கு பின்னர் பாராளுமன்றக்குழு கூட்டமொன்று புதன்கிழமை (நவ.23) நடைபெற்றது. இதன்போது, தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குரிய தீர்வினைப் பெறுவதற்கு தற்போது ஏற்பட்டுள்ள களச்சூழல் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், குறித்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்துவதென்றும், இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டி அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப்பட்டு மீளப்பெறப்பட முடியாத வகையில் நிரந்தரமான, நியாயமான தீர்வொன்றை பெற்றுக்கொள்வதற்காக அடுத்தகட்ட நடவடிக்கைளை முன்னெடுப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தக் கூட்டத்தின்போதே, சம்பந்தன், ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களையும் இன்று நடைபெறுகின்ற அரசியல் கட்சிகளின் தலைவர்களுடான கூட்டத்தில் பங்கேற்றுமாறு அழைப்பு விடுத்தமை குறிப்பிடத்தக்கது.






"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்

அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.

மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பதவி வெற்றிடம்

**மேற்படி பதவிக்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக கல்வி மற்றும் சமூகப்பணி செய்து வரும் தன்னார்வ தொண்டு நிறுவனமாக செயற்பட்டுவரும் அறிவாலயம் அறக்கட்டளை நம்பிக்கை நிதியத்திற்கு மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறன.

எதிர்பார்க்கப்படும் தகைமைகள்

அடிப்படை கல்வித் தகைமை

1. சா.த பரீட்சையில் ஆங்கிலத்தில் சிறந்த தேர்ச்சி உட்பட ஆறு பாடங்களில் சித்தி
2. உ.தரத்தில் ஆங்கிலம் உட்பட 3 பாடங்களில் சிறப்பு சித்தி

ஏனைய தகைமைகள்

1. உளவியல் அல்லது உளசமூக மேம்பாடு அல்லது சமூகவியல் கற்கைகளில் சான்றிதழ் மற்றும் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவத்தினை பெற்றிருத்தல் வேண்டும்.
2. ஆங்கிலத்தில் சரளமாக தொடர்பாடலை மேற்கொள்ள கூடியவராக இருத்தல் வேண்டும்.
3. கணனியில் NVQ மட்டம் 4 பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் அல்லது கணனித்துறையில் 1 வருடத்திற்கு குறையாத அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
4. பயிற்சி வகுப்புகள் உள்ள தினங்களில் சனி ஞாயிறு விடுமுறை தினங்களிலும் வேலை செய்யக் கூடியவராக இருக்க வேண்டும்
5.வயது 25-35 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
6. மோட்டார் சைக்கிள் அல்லது ஏனைய வாகன அனுமதிப் பத்திரம் இருத்தல் வேண்டும்.
7.மட்டக்களப்பு மாவட்டத்தில் நிரந்தர வதிவிடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
8.மாதாந்தம் சகல படிகளுடன் 35000ரூபா சம்பளமாக வழங்கப்படும்.

*தங்களால் சுயமாக தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையினை arivalayam@hotmail.fr என்ற மின்னஞ்சலுக்கு எதிர்வரும் மார்கழி 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.*

Founder
Arivalayam foundation trust
Pandariyaveli
Kokkaddicholai
Batticoloa
Srilanka

## மக்கள் கருத்துக்கு செவிசாய்க்காததன் விளைவுகளை ராஜபக்சக்களிடம்

தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று (24) 2023 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

தேர்தலை நடத்த மாட்டோம் என ஜனாதிபதி கூறியதும் அதற்கு ஆதரவாக சபையில் இருந்த அடிமைகளின் ஒரு பகுதியினர் ஆரவாரம் செய்தனர் எனவும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறும் சந்தர்ப்பத்தில் அவ்வாறு ஆரவாரம் செய்வதை அங்கீகரிக்கவில்லை எனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,பாராளுமன்றத்தில் சிலர் ஒரு அடிமைத்தனத்தில் இருந்து இன்னுமொரு அடிமைத்தனத்திற்கு மாறியுள்ளனர் எனவும் தெரிவித்தார். ஜனாதிபதியின் உரைக்கு ஒரு சில அடிமைகள் ஆரவாரம் காட்டினாலும் நாட்டின் 220 இலட்சம் மக்கள் மிகவும் வருத்தம் கொண்டதாகவும்,ஜனநாயகத்துக்கான மக்கள் சக்தி விரைவில் உருவாகும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தற்போதைய நாடாளுமன்றத்தில் ஏற்பட்டுள்ள மாறுபட்ட நிலை முறையாக மறுநிலைப்படுத்தப்பட வேண்டும் எனவும், ஜனநாயகத்தைப் மதிப்பதாக கூறும் ஜனாதிபதி,நேற்றுக் கூறிய அந்த கருத்தை உடனடியாக நீக்கி தேர்தலை நடத்தி, நாடு மீண்டு வர சந்தர்ப்பம் வழங்குமாறு கேட்டுக்கொள்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி நன்றியுணர்வு அறிந்தவராக இருந்தால் போராட்டத்திற்கு நன்றி சொல்ல வேண்டும் எனவும்,
போராட்டத்தினாலையே அவர் ஜனாதிபதியானார் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,அமைதியான போராட்டம் வன்முறையாக மாறியது கடந்த மே 9 ஆம் திகதி நடந்த தாக்குதலாலையே எனவும் அவர் தெரிவித்தார். எந்தவிதமான வன்முறைகளையும் தாம் அனுமதிப்பதில்லை எனவும்,அவ்வாறான வன்முறைச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,வன்முறையும் மிலேச்சத்தனமுமின்றி இடம் பெற்ற போராட்டத்தை,அலரி மாளிகையில் நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்களே வன்முறை ரீதியாக தாக்கினர் எனவும் தெரிவித்தார்.

அதேபோல்,அமைதியான பொது மக்கள் போராட்டத்தை அவசர கால சட்டத்தைப் பயன்படுத்தி ஒடுக்க முயன்றால், எதிர்க்கட்சியாக அதற்கு எதிராக முன் நிற்பதாகவும்,அதற்குத் தேவையான தலைமைத்துவத்தை வழங்குவதாகவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நாட்டின் பொருளாதாரத்தை அழித்த ராஜபக்ச குடும்பத்திற்கு எதிராக மக்கள் எழுவதை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

அவ்வாறே,தான் மஹிந்தவின் சீடராக இருந்திருந்தால் இந்நேரம் எதிர்க்கட்சித் தலைவராக அல்லாது ஜனாதிபதியாகவே நியமிக்கப்பட்டிருப்பேன் என தான் மகிந்த ராஜபக்சவின் சீடர் என்று கூறியவருக்கு கூறவேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார். எனவே இவ்வாறான பொய்ப் பிரசாரங்களால் தாம் உள்ளிட்ட எதிர்க்கட்சியை அழிக்க முடியாது என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,ராஜபக்சவைப் பின்பற்றுபவராக மாறி தனது கொள்கைகளையும் சுய மரியாதையையும ஒருபோதும் காட்டிக் கொடுக்கப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# நகராட்சி மன்றத்தின் 2023ம் ஆண்டுக்கான பாதீடு நிறைவேற்றப்பட்து



**வடமலை ராஜ்குமார்**

திருகோணமலை நகராட்சி மன்றத்தின் 2023 ம் ஆண்டுக்கான பாதீடு இன்று (24) ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. தலைவர் நா.இராஜநாயகம் தலைமையில் காலை 10.00 மணியளவில் கூடிய போது சபைக்கு 23 உறுப்பினர்கள் பிரசன்னமாகி இருந்தார்கள். ஒருவர் கூட்டத்திற்கு சமூகமளிக்கவில்லை. இந்த நிலையில் சபை உறுப்பினர்களின் பாதீடு தொடர்பான உரைகளை தொடர்ந்து மொத்த பெறுகை ரூபா 350,741,460 முன்னூற்றி ஐம்பது மில்லியன் ஏழு இலட்சத்து நாற்பத்தி ஒரு இலட்சத்து நானுற்றி அறுபது ரூபாய்) மதிப்புள்ள பாதீடு எவ்வித எதிர்ப்புமின்றி ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.

# வெருகல் பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரதேச இலக்கிய விழா





**ஹஸ்பர்**

நாடொன்றின் சமூகமொன்றின் இருப்புக்கு கலை, கலாசார, பண்பாட்டு அம்சங்கள் இன்றியமையாயததாக அமைவதாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தெரிவித்தார். வெருகல் பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரதேச இலக்கிய விழா இன்று பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் தலைமையில் நடைபெற்றபோதே அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஒவ்வொரு சமூகத்தினதும் கலை, கலாசார மற்றும் பண்பாட்டு அம்சங்கள் பாதுகாக்கப்படல் வேண்டும். அவற்றை மதித்தல் வேண்டும். பாரம்பரிய கலை கலாசார அம்சங்கள் மறைந்து வரும் தருணத்தில் அவற்றுக்கு புத்துயிர் வழங்கும் நோக்கில் இக்கலை இலக்கிய விழாவின் நிகழ்வுகள் அமையப்பெற்றது. குறிப்பாக பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் கலைசார் திறன்களை இனங்கண்டு அவர்களது நிகழ்ச்சிகளை நெறியாழ்கைக்குட்படுத்தி சிறப்பான முறையில் முன்வைப்பதற்கு பிரதேச செயலாளர் வழங்கிய தலைமைத்துவத்தை பாராட்டுவதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

காவடி, கிராமிய நடனம், நாட்டார் பாடல்,தெம்மாங்கு நடனம், நாட்டுக்கூத்து,குறவர் நடனம், வயல் பாடல் உள்ளிட்ட பல பாரம்பரிய அம்சங்கள் அரங்கேறியமை குறிப்பிடத்தக்கது.

பிரதேச செயலக உத்தியோகத்தர் மிக சிறப்பாக தம் கலையுணர்வுகளை இதன்போது முன்வைத்தனர். பாரம்பரிய கலைஞர்கள் மூவர் இதன்போது கௌரவிக்கப்பட்டனர். அரசாங்ரக் அதிபர் இதன்போது பிரதேச செயலாளர் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார். இந் நிகழ்வில் மூதூர் பிரதேச செயலாளர் எம். பி. எம். முபாரக், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாண பணிப்பாளர் , உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# ஆடைக்கு கொடுப்பனவு கோரும் ஆசிரியர்கள்

ஆசிரியர்களுக்கான குறிப்பிட்ட ஆடை சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டால் அதற்கென கொடுப்பனவு ஒன்று வழங்கப்பட வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. அச் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனை தெரிவித்துள்ளார்.

வசதியான ஆடைகளை அணிந்து அலுவலகங்களுக்கு வருமாறு வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை தன்னிச்சையாக மாற்ற அரசாங்கம் முயற்சித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதாக ஜோசப் ஸ்டாலின் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

“அரசு ஊழியர்கள் அவர்களுக்கு வசதியான உடையில் பணிக்கு வரம் வாய்ப்பைப் பயன்படுத்த முடியாது என்று சொன்னால், அது பொதுவான முடிவாக இருக்க வேண்டும். ஆடை விடயத்தில் வெவ்வேறு நபர்களால் முடிவெடுக்க முடியாது. எனவே, அமைப்பு இல்லாமல் தன்னிச்சையாக மாற்றங்களைச் செய்தால், நாங்கள் தெளிவாகச் சொல்கிறோம். கண்டிப்பாக நீதிமன்றம் செல்வோம். தற்போது உள்ளதை அப்படி மாற்ற முடியாது. இப்போது சேலை அணிவதில் வெளிப்படையாக எந்தப் பிரச்சினையும் இல்லை. எதிர்காலத்திலும் எந்த பிரச்சனையும் இல்லை. ஒருவித நிர்ப்பந்தம் ஏற்பட்டால், அவர்களுக்கு சீருடை கொடுப்பனவு ஒன்று வழங்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் விரும்பி சேலை அணிவார்கள். அது பிரச்சனை இல்லை. இது கட்டாயமாக்கப்பட்டால், நாங்கள் நிச்சயமாக கொடுப்பனவை பெறுவோம்.”

# மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் கௌரவிப்பு

**சுமன்**

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் கௌரவிப்பு நிகழ்வு இன்றைய தினம் மட்டக்களப்பு வெல்லாவெளியில் அமைந்துள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சி மட்டு அம்பாறை தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றது. ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் கொள்கைப் பரப்புச் செயலாளர் ப.சாந்தன், காரைதீவுப் பிரதேச சபைத் தவிசாளர் கி.ஜெயசிறில், வெல்லாவெளி பிரதேச சபை உறுப்பினர் தியாகராஜா, உள்ளிட்ட கட்சியின் பிரதிநிதிகள், மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் மாவீரர்களை நினைவு கூரும் முகமாக மாவீரர்களின் பெற்றோர், ஜனநாயகப் போரளிகள் கட்சியின் உபதலைவர், காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் உள்ளிட்டோரால் ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நினைவுரை, சிறப்புரைகள் இடம்பெற்று பின் மட்டக்களப்பு மாவட்ட மாவீரர்களின் பெற்றொர்களை கௌரவிக்கும் முகமாக அவர்களுக்கு உதவிகள் மற்றும் தென்னங்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

மாவீரர் நினைவு வாரத்தை அனுஸ்டிக்கும் முகமாக வடக்கு கிழக்கு பகுதிகளில் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் பல செயற்திட்டங்கள், துயிலுமில்ல துப்பரவுப் பணிகள், மாவீரர் தின நினைவேந்தல் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் மாவீரர் குடும்பங்களைக் கௌரவிக்கும் முகமாக மேற்படி நிகழ்வு ஒழுங்கு படுத்தப்பட்டு நடாத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.





நிதியுதவி NH INVESTMENT & SECURITIES


# ஊடகவியலாளர்களின் தொழில்முறை உரிமைகள் மற்றும் பிரச்சனைகள் பற்றிய ஆய்வு வெளியீடு





இலங்கையில் ஊடகத்துறையின் தொழில்முறை தரத்தை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் சுதந்திர ஊடக இயக்கம் இலங்கையில் ஊடகவியலாளர்களின் தொழில்முறை உரிமைகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து மேற்கொண்ட ஆய்வறிக்கை இன்று (24) கொழும்பில் வெளியிட்டு வைக்கப்பட்டது. சுதந்திர ஊடக இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் லசந்த டி சில்வா தலைமையில் கொழும்பு கிராண்ட் ஓரியண்டல் ஹோட்டலில் இன் நிகழ்வு நடைபெற்றது.

இவ் ஆய்வறிக்கையானது ஊடக்துறை அமைச்சின் மேலதிக செயலாளரிடம் சிரேஸ்ட ஊடகவியலாளர்களான சி தொடாவத்த, சுனில்ஜயசேகர ஆகியோர் வழங்கி வெளியிட்டு வைக்கப்பட்டது. நிகழ்வில், சுகாதாரத் தொழிற்துறைக் கல்விமான்கள் சங்கத் தலைவர் ரவி குமுதேஷ் , சட்டத்தரணி பிரியலால் சிறிசேன, சிரேஸ்ட ஊடகவியலாளர் சுனில் ஜயசேகர ஆகியோர் பங்கு கொண்ட கலந்துரையாடல் ஒன்றும் நடைபெற்றது. நிகழ்வில், இலங்கையின் அனைத்து பிரதேசங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர். இதன்போது ஆய்வினை மேற்கொள்ளட சிரேஸ்ட ஊடகவியலாளர் சிதொடாவத்த ஆய்வு தொடர்பாக விளக்கமளித்தார். இதன்போது பிரதேச ரீதியாகவுள்ள செய்தியாளர்கள், கொழும்பு உள்ளிட்ட இடங்களிலுள்ள தேசிய பிரதான ஊடகங்களில் பணியாற்றுபுவர்கள் வரையுள்ள பிரச்சினைகள், தீர்வுகள் குறித்து விபரித்தார்.


Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
www.arunthathee.com
+94 777 164 524

மணமகன் விபரம் (மணமகள் தேவை)

25300 | 1975
Germany | Manager
Diploma
179 செ.மீ

25273 | 1988
Canada
Tech Account Manager
Degree
170 செ.மீ | 04

24448 | 1992
Sri Lanka
Tech Writer | B.eng
180 செ.மீ

25272 | 1976
Switz
Volunteer Teacher
172 செ.மீ | 01

25299 | 1987
Newzland
Admin Staff | B.eng
169 செ.மீ | 04

25274 | 1994
Business | A/L
167 செ.மீ

25254 | 1978
Australia
Forklift Driver | Diploma
173 செ.மீ

25264 | 1989
Senior Software Engineer
Bsc
173 செ.மீ | 02

மணமகள் விபரம் (மணமகன் தேவை)

23341 | 1988
Sri Lanka
Asst Accountant
Non RC | A/L
168 செ.மீ

25293 | 1994
Venezuela
Development officer
Degree
160 செ.மீ | 05

25303 | 1998
Sri Lanka
Vocational Course
170 செ.மீ | 02

24199 | 1990
MBA
Junior Excutive Asst
155 செ.மீ | 07

25262 | 1998
SL
Asst Project Manager
Bsc
167 செ.மீ | 07

24283 | 1994
Divorced
Graduate Teacher
Bsc
160 செ.மீ | 12

25284 | 1991
Sri Lanka
Doctor | MBBS
165 செ.மீ

23326 | 1994
SL
Lecturer
Bsc
163 செ.மீ

since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
வழங்கும்
வரன் தேடுவோம் வாருங்கள்
ஆயிரக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களிலிருந்து உங்களுக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள்
யாழ்ப்பாணம்
செல்வமஹால் 20-11-2022
கொழும்பு
தமிழ்ச்சங்கம் 27-11-2022

இந்தியாவிலிருந்து
பிரபல ஜோதிடர்
பட்டுக்கோட்டை சுப்ரமணியன்
அவர்கள் நவம்பர் 20 முதல் 27 வரை இலங்கையில், உங்கள் ஜாதக பலன்களை அறிந்துகொள்வதற்கு



நவம்பர் 20, 21, 22
யாழ்ப்பாணத்திலும்
நவம்பர் 24, 25, 26, 27
கொழும்பிலும்
முன்பதிவு செய்ய அழையுங்கள்
074 172 4524

அருந்ததி பிரைவட் லிமிட் | +94 777 164 524
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# வளிமண்டலவியல் திணைக்களத்தின் நாளாந்த வானிலை அறிக்கை தமிழில் இருட்டடிப்பா?

## காரைதீவு பிரதேச சபை தவிசாளர் ஜெயசிறில் கேள்வி

**( வி.ரி.சகாதேவராஜா)**

இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் நாளாந்தம் வெளியிடும் வானிலை அறிக்கை தனியே சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே வெளிவருகின்றது . தமிழில் இவ் அறிக்கை வெளியாவது இல்லை. இது ஏன் என தமிழ் பேசும் மக்கள் பலத்த விசனத்துடன் கேள்வி எழுப்புகின்றனர் என்று காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் விசனம் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்...

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் இல்லையா? அவர்களுக்கு வளியினால் வரக்கூடிய அனர்த்தங்கள் தாக்க மாட்டாதா? அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் இதனைக் கவனத்தில் கொள்வதில்லையா? என்றெல்லாம் அவர்கள் கேள்வி எழுப்புகின்றார்கள்.

மனித உயிர்களை பாதுகாக்கும் அனர்த்த முகாமைத்துவ முன்னாயத்த அறிவிப்பிலும் பாரபட்சம் காட்டப்படுகின்றதா? அவசியமான அவசர அனர்த்த முகாமைத்துவ முன்னாயத்த அறிவிப்புகள் அவரவர் பாஷையில் வெளியிடப்பட்டாலன்றி அவற்றால் பிரயோசனமில்லை என்று கூறப்படுகிறது. தமிழ் பேசும் மக்கள் கூடுதலாக உள்ள சில மாவட்டங்களில் அனர்த்த முகாமைத்துவ முன்னாயத்த அறிவிப்புகள் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. இனிமேலாவது வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் தமிழிலும் இந்த அறிக்கைகளை வெளியிட வேண்டும் என்று மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

# மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு நிதியுதவி



**த.சுபேசன்**

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் சமூக மேம்பாட்டுப் பிரிவினரின் ஏற்பாட்டில் அண்மையில் மன்னார் பிரதேசத்தில் உள்ள இரண்டு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டிருந்தது. ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் செயற்பாட்டாளர் த.கதிர்காமநாதனின் நிதிப் பங்களிப்பில் மன்னார் ஆண்டான்குளம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் பெரிய குஞ்சுக்குளம் மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம் ஆகியவற்றுக்கு நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டது.சங்கத்தின் உறுப்பினர்களுக்கு சுழற்சி முறையில் கடனுதவி வழங்கும் பொருட்டு குறித்த உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் முக்கியஸ்தர்கள் கலந்து சிறப்பித்திருந்தனர்.

# இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் சர்வதேச கல்வி நிறுவனங்களுடன் கைச்சாத்து



**நூருல் /ஹுதா உமர்**

அண்மைக்காலமாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உயர் கல்வியினை சர்வதேசமயப்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றது. பல்கலைக்கழக உபவேந்தர் பேராசியர் ஏ. றமீஸ் தலைமையில் பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ. றியாட் ரூளி இதற்கான முழு முயற்சியில் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகம் சர்வதேச ரீதியாக செயற்படுகின்ற பல்கலைக்கழகங்கள், கல்வி மற்றும் ஆய்வு சார்ந்த அமைப்புக்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டு, அவற்றினை பயனுள்ளவகையில் நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வருவின்றது. அந்த வகையில் அண்மையில் இந்திய கல்விசார் ஆய்வு மன்றத்துடனான (*Indian Academic Research Association*) சந்திப்பும் உடன்படிக்கையும் கடந்த 27.09.2022 ஆம் திகதி அன்று இணையவழி ஊடாக இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து இன்றும் (24-11- 2022) **KSR College of Arts & Science for Women in India** நிறுவனத்தினுடான சந்திப்பும் உடன்படிக்கையும் இணையவழி ஊடாக இடம்பெற்றது. இவ்வுடன்படிக்கைக்கான ஆரம்பகட்ட முன்னெடுப்புக்களை தென்கிழக்குப் பல்கலைக்கழகப் சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறைத் தலைவர்பேராசிரியர் எம்.பீ.எம். இஸ்மாயில் மேற்கொண்டிருந்தார். இந்நிகழ்வில் பல்கலைக்கழக உபவேந்தர், **KSR College of Arts & Science for Women in India** நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள் மற்றும் பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இவ்வமைப்புடனான புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் கற்றல், கற்பித்தல், ஆய்வு மற்றும் புத்தாக்கத் துறைகளில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர்களும் மாணவர்களும் பயனடைவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன்போது ஆசிரிய-மாணவ பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்கள், ஆய்வு மாநாடுகள், ஆய்வு வெளியீடுகள், சான்றிதழ் மற்றும் டிப்ளோமாக பாடநெறிகள், ஆசியர் மற்றும் மாணவர் பயிற்சிகள் உள்ளிட்ட பல ஒன்றினைந்த வேலைத் திட்டங்களை துரிதகதியில் நடைமுறைப்படுத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டது.

இதுபோன்ற புரிந்துணர்வு உடன்படிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது. இதன்படி ரஷ்யா, துருக்கி, மலேசியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களுடன் எதிர்வரும் காலங்களில் மேலும் பல புரிந்துணர்வு உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

# இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் விஜயம்



**தலவாக்கலை பி.கேதீஸ்**

இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் ஸ்ரீ வினோத் கே ஜேகப் அட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டு அங்குள்ள சிரேஷ்ட முகாமைத்துவ குழுவினருடன் கலந்துரையாடினார். இக்கலந்துரையாடலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ ின் உபதலைவர் பாரத் அருள்சாமி, அட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் வதிவிட முகாமையாளர் விஜேசிங் ஆகியோர் கலந்துக்கொண்டனர். தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தை மேம்படுத்துவது இந்திய அரசின் தற்போதைய அபிவிருத்தி திட்டங்களில் ஒன்றாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தொற்றுக்களை தடுத்தல் எனும் தொனிப்பொருளில் வருடாந்த மாவட்ட மீளாய்வு



**நூருல் /ஹுதா உமர்**

தாயிலிருந்து குழந்தைக்கு **HIV** மற்றும் சிபிலிஸ் போன்ற தொற்றுகள் ஏற்படுவதனை தடுத்தல் எனும் தொனிப்பொருளில் வருடாந்த மாவட்ட மீளாய்வுக் கூட்டம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ எல் எம் ரிபாஸ் தலைமையில் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய பாலியல் தொற்று நோய்கள் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம் என் எம் தில்ஷான் அவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இம்மீளாய்வுக் கூட்டத்தில் அம்பாறை மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எஸ். சேரசிங்க உள்ளிட்ட பிரிவு தலைவர்களும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரிவு தலைவர்களும் பங்கு கொண்டதுடன் தத்தமது மீளாய்வு அறிக்கைகளையும் சமர்ப்பித்திருந்தனர்.

கல்முனை பிராந்தியத்தில் பாலியல் தொற்றுக்கள் சில பிரதேசங்களில் அதிகரிப்பதாக சுகாதார உத்தியோகத்தர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக பாலியல் தொற்று நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம் என் எம் தில்ஷான் அவர்கள் இதனை பணிப்பாளர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தமையினால் இவ்விசேட கூட்டம் இன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு தாயிடமிருந்து தொற்றுக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாக காணப்பட்ட போதிலும் தாயிடமிருந்து குழந்தைகளை பாதுகாப்பதற்கான விசேட பொறிமுறைகள் இக்கூட்டத்தில் கண்டறியப்பட்டதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான விடயங்களை இல்லாதொழிப்பதற்கான செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளித்து செயல்பட உள்ளதாகவும் பணிப்பாளர் இதன்போது தெரிவித்திருந்தார்

# முன்னாள் பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கத்தினுடைய மறைவு மலையக சமூகத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்

## முன்னாள் ஆளுநர் ஹிஸ்புழ்ழாஹ்

**நூருல் /ஹுதா உமர்**

முன்னாள் பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் அவர்கள் மலையக மக்களினுடைய கல்வி , சமூகம் சார்ந்த பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்காக முழுப்பங்களினை வழங்கி அயராது பாடுபட்டவர். இலங்கை தொழிலாளர் காங்கிரஸினுடைய மூத்த தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமான், ஆறுமுகம் தொண்டமான் உட்பட இன்றைய தலைவர் வரையிலும் முழுமையாக இருந்து செயற்பட்டவர் என கிழக்கு மாகாண முன்னாள் முன்னாள் ஆளுநர் டாக்டர் எம்.எல். எம்.ஏ.ஹிஸ்புழ்ழாஹ் விடுத்துள்ள அனுதாப செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அனுதாப செய்தியில் தொடர்ந்தும், பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சராக பசில் ராஜபக்ஷ இருந்த போது அவரும் என்னோடு இணைந்து செயற்பட்டவர். சுமார் இரண்டு, மூன்று ஆண்டுகளாக என்னோடு இணைந்து செயற்பட்டவர். குறிப்பாக சகல இனங்களையும் நேசித்தவர். அவரது மறைவுச் செய்தி கேட்டு நான் ஆழ்ந்த கவலை அடைகின்றேன். அவரது குடும்ப உறுப்பினர்கள், மலையக தொழிலாளர் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்

# திருகோணமலையில் மனிதாபிமான நிகழ்ச்சித் திட்டத்துக்கான பயிற்சி



**ஹஸ்பர்**

திருகோணமலை மாவட்டத்தில் அமுல்படுத்தப்படும் மனிதாபிமான செயற்திட்டத்தின்கீழ்தெரிவுசெய்யப்பட்ட வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான TOT பயிற்சிநெறியொன்று (22)திருகோணமலை ஜேகப்பார்க் ஹோட்டலில் இடம் பெற்றது. குறித்த பயிற்சியானது சேவ் த சில்ரன் மற்றும் லீட்ஸ் நிறுவனம் இணைந்து யுஎஸ்எயிட் நிதி அனுசரனையில் இடம் பெற்றது.

குறித்த திட்டமானது தம்பலகாமம், கந்தளாய், குச்சவெளி, பதவிசிறிபுர ஆகிய பிரதேச செயலகப் பகுதிகளில் நடை முறைப்படுத்தப்படவுள்ளது. இதில் அனர்த்த முகாமைத்துவம், சிறுவர் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு, பால் நிலை சமத்துவம் உள்ளிட்ட பல விடயங்களில் தெளிவூட்டல் பயிற்சி இடம் பெற்றது.

குறித்த பயிற்சிக்கு வளவாளராக அனர்த்த முகாமைத்து நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ். சுகுனதாஸ் கலந்து கொண்டார்.

இதில் தெரிவு செய்யப்பட்ட வெளிக்கள உத்தியோகத்தர்கள், லீட்ஸ் ,சேவ்த சில்ரன் நிறுவன உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# தேசியமட்ட மனைப்பொருளியல் போட்டிக்கு கிழக்கிலிருந்து 10 மாணவர் தெரிவு

( வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கு மாகாணமட்ட மனைப்பொருளியல் பாடத்துக்கான வினா விடைப் போட்டியில் 10 மாணவர்கள் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்தார். இவர்களுக்கான தேசிய மட்டப் போட்டி நாளை (25) வெள்ளிக்கிழமை மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தில் நடைபெற இருக்கின்றது. கிழக்கு மாகாண மட்ட போட்டி கடந்த 22ந் தேதி திருகோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் நடைபெற்றது. போட்டியில் ஏழு இடங்களை மட்டக்களப்பு மாவட்டமும், இரண்டு இடங்களை அம்பாறை மாவட்டமும் ,ஓர் இடத்தை திருகோணமலை மாவட்டமும் பெற்று கொண்டது.

2022 ஆம் ஆண்டில் தரம் 11 சாதாரண தரப் பரிட்சைக்கு மனைப் பொருளியல் பாடத்தில் தோற்ற இருக்கின்ற மாணவர்களின் அறிமுறை மற்றும் செயன்முறைத் திறன்களை விருத்தி செய்யும் நோக்கில் இவ் வினா விடை போட்டி நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண ஊடகத்துறை விருது



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில்கிழக்குமாகாணபண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சரண்யா சுதர்சன் தலைமையில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இந் நிகழ்வின்போது அட்டாளைச்சேனையைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஏ.றமீஸ் இரண்டு விருதுகளைப் பெற்றுக் கொண்டார். கிழக்கு மாகாண ஊடகத்துறை விருதினையும், படைப்பாக்க புகைப்படக் கலைஞர் விருதினையும் இவர் பெற்றுக் கொண்டார். கடந்த 20 வருடங்களாக ஊடகத்துறையில் இணைந்து சேவையாற்றி வரும் இவர் ஊடகத்துறைக்கான இளங்கலைஞர் விருதினையும், கிழக்கு மாகாண இலக்கிய விழாவினையொட்டி கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச உத்தியோகத்தர்களிடையே நடத்தப்பட்ட படைப்பாக்கப் போட்டியில் கலந்து கொண்டு, புகைப்படக் கலைஞர் போட்டியில் முதலாமிடத்தினையும் இவர் பெற்றுக் கொண்டதனால் இதற்கான விருதும் மாகாண இலக்கிய விழாவின்போது இவருக்கு வழங்கப்பட்டது.

அக்கரைப்பற்று தேசிய பாடசாலையில் ஆசிரியராக சேவையாற்றி வரும் இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் பிறை எப். எம். வானொலி சேவையில் அறிவிப்பாளராகவும் கடமையாற்றி வருகின்றார். இவருக்கு கடந்த ஆண்டு அரச வானொலி விருதும் கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# ஓய்வூதியகாரரின் நேர்முகத் தேர்வை ஒவ்வொரு மாகாணத்திலும் நடத்த வேண்டும்

( வி.ரி.சகாதேவராஜா)

அரச சேவையிலிருந்து ஓய்வு பெறும் ஓய்வூதியர்களின் நேர்முக தேர்வை ஒவ்வொரு மாகாணத்திலும் நடத்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியர்கள் ஓய்வூதியத்தை பெறுவதற்கு முன்னர் இத்தகைய நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவது வழமை. ஆனால் அவர்களை தூரப் பிரதேசங்களுக்கு அமைப்பதால் பலத்த சிரமங்களை எதிர்நோக்க வேண்டி நேரிடுகிறது. பாஷை பிரச்சினையும் எழுகின்றது.

எனவே ஒவ்வொரு மாகாணத்திலும் இந்த நேர்முக தேர்வை நடத்த உதவுமாறு ஓய்வுதியர்கள் இலங்கை ஓய்வூதிய திணைக்கள பணிப்பாளர் நாயகத்தை பணிப்பாளர் நாயகத்தை கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். கடந்த காலங்களில் கொழும்பில் மாத்திரம் இந் நேர்முகத் தேர்வு இடம்பெற்று வந்தது. அண்மை காலமாக அது பதுளை மாத்தறை அனுராதபுரம் குருநாகல் ஆகிய நான்கு இடங்களிலும் இந்த நேர்முக தேர்வு இடம் பெற்று வருகிறது.

வடக்கு கிழக்கு மாகாண ஓய்வூதியர்கள் பதுளை மற்றும் அனுராதபுரம் போன்ற சிங்கள பிரதேசங்களுக்கு அழைக்கப்படுகிறார்கள். இதனால் அவர்கள் வயதான காலத்தில் இரண்டு நாட்கள் பாஷை பிரச்சினையுடன் அலையவேண்டியுள்ளது. எனவே வடக்கு கிழக்கு தமிழ் பேசும் ஓய்வூதியர்களுக்கான நேர்முகத் தேர்வை வவுனியாவில் திருகோணமலையில் அல்லது அம்பாறையில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றார்கள். கடைசி வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு திருகோணமலையில் ஆவது ஏற்படுத்துமாறு தமிழ் பேசும் ஓய்வூதியர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

# கிழக்கு மாகாண பாடல் துறை போட்டியில் சிறந்த பாடகர் விருது பெற்றோர் விவரம்

(வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கு மாகாண கலாசார திணைக்களம் நடத்திய தமிழ் இலக்கிய போட்டியிலே பாடல் துறையிலே வெற்றி பெற்றோர் விவரத்தை மாகாண கலாச்சார பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் வெளியிட்டுள்ளார். அதன்படி 2022 ஆம் ஆண்டுக்கான சிறந்த பாடகர் விருது பெற்ற விவரம் வெளியிடப்பட்டிருக்கின்றது. பாடல் துறையிலே வாழ்நாள் சாதனையாளராக அக்கரைப்பற்று வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.எம்.முபாரிஸ் தெரிவாகி இருக்கின்றார்.

கிழக்கு மாகாண சிரேஸ்ட பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கான பாடல்துறை போட்டியிலே முதலாம் இடத்தை மட்டக்களப்பு பிரதி சுகாதார பணிப்பாளர் டாக்டர் நாகலிங்கம் மயூரன் பெற்றுக்கொண்டார்.

இரண்டாம் இடத்தை மட்டக்களப்பு கலால் திணைக்களத்தின் கலால் அத்தியட்சகர் செல்வராஜா ரஞ்சன் பெற்றுக்கொள்ள மூன்றாம் இடத்தை மது வரி திணைக்களத்தின் நிருவாக சேவை உத்தியோகத்தர் ஷண்முகம் தங்கராஜா பெற்றார்.

நான்காம் இடத்தை குச்சவெளி பிரதேச செயலக கணக்காளர் சபரிமுத்து அன்ரனி தாஸ் மற்றும் ஐந்தாம் இடத்தை கல்முனை வலயக்கல்விப் பணிமனையின் பிரதி கல்விப் பணிப்பாளர் எ.எச். பௌஸ் பெற்றுக் கொண்டார். மாகாண அரச உற்றியோதர்களுக்கான பாடல் துறை போட்டியிலே முதலாம் இடத்தை மண்முனை வடக்கு பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி நீரஜா செல்வராஜா பெற்றார். இரண்டாம் இடத்தை மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலக அபிவிருத்தி உத்தியோகத்தர் கந்தசாமி சதாநாதன் பெற்றுக் கொள்ள மூன்றாம் இடத்தை திருகோணமலைபொதுவைத்தியசாலை சாதிய உத்தியோகத்தர் செல்வி நவரூபிகா கனகசிங்கம் பெற்று கொண்டார். நான்காம் இடத்தை மூதூர் பு.ஜெயாகரனும் ஐந்தாம் இடத்தை திருமலை செல்வி சி.கேதாரிணி ஆகியோர் பெற்று கொண்டனர்.

2021

இதேவேளை 2021 ஆம் ஆண்டுக்கான பாடல் துறை போட்டியிலே சிரேஸ்ட பதவி நிலை அரச அதிகாரிகளுக்கான போட்டியில் முதலாம் இடத்தை அக்கரைப்பற்றைச் சேர்ந்த டாக்டர் முபாரிஸ் பெற்றுக் கொண்டார் .

இரண்டாம் இடத்தை கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ஏ.ஜே.அதிசயராஜ் பெற்றுக்கொள்ள மூன்றாம் இடத்தை பெற்றுக்கொள்ள மட்டக்களப்பைச் சேர்ந்த நேச கஜேந்திரன் பெற்றுக்கொண்டார். இதுதவிர தமிழ் மொழியில் வேறு யாருக்கும் சிறந்த பாடகர் விருது வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காரைதீவு ஆபத்தில் : இதுவரை 49டெங்கு நோயாளிகள்




( வி.ரி. சகாதேவராஜா)

சமகால காலநிலை காரணமாக காரைதீவுப் பிரதேசம் டெங்கு ஆபத்தை எதிர்நோக்கி இருக்கின்றது. இதுவரை 49 நோயாளிகள் இனங்காணப்பட்டு இருக்கின்றார்கள். எனவே பொதுமக்கள் நிறுவனங்கள் சகலரும் இதனை ஒழிப்பதற்கு உதவ வேண்டும். இவ்வாறு காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி டாக்டர் தஸ்லிமா பஷீர் தெரிவித்தார் .

டெங்கு நோய் ஒழிப்பு தொடர்பான விசேட அவசர கூட்டம் இன்று(24) வியாழக்கிழமை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்றது. கூட்டத்தில் பிரதேச செயலகம் பிரதேச சபை அதிபர்கள் மற்றும் பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர். அங்கு சுகாதார வைத்திய அதிகாரி மேலும் தெரிவிக்கையில்..

மழைக்கு பிந்திய இந்த காலகட்டத்தில் டெங்கு நோய் பெருகுகின்ற ஆபத்து கூடுதலாக காணப்படுகின்றது. குறிப்பாக காரைதீவு 8 ,10 ,11, 12 ஆகிய பிரதேசங்களில் கூடுதலான டெங்கு நோயாளிகள் இனங் காணப்பட்டு வருகிறார்கள். எங்களை பொறுத்தவரையிலே இதற்கு விசிற வேண்டிய இரசாயன பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது .எனவே பொது நிறுவனங்கள் பொதுமக்கள் எங்களுடன் ஒத்துழைக்க வேண்டும்.

இரசாயனப் பொருட்களை தருவது மாத்திரம் அல்ல சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருப்பதும் உங்கள் கடமையாகும். வெற்றுக் காணி வைத்திருப்பவர்கள் உடனடியாக அதனை சுத்தமாக்கி கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். உங்களை பாதுகாப்பதற்காகவே இந்த நடவடிக்கை அனைத்தும் எடுக்கப்படுகிறது. என்றார்.

# பொலன்னறுவையிலிருந்து கல்குடாவுக்கு கேரள கஞ்சாவைக் கடத்தியவர் மடக்கிப்பிடிப்பு



பொலன்னறுவையிலிருந்து கல்குடாவுக்கு கேரள கஞ்சாவைக் கடத்தி வந்த புதிய நகர், பொலன்னறுவையைச்சேர்ந்த 42 வயதுடைய சந்தேக நபரொருவர் இன்று (24) அதிகாலை 5 மணியளவில் ஜெயந்தியாயவையில் வைத்து மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து விரைந்து செயற்பட்ட காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் வாழைச்சேனை பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட அதிரடிநடவடிக்கையின் போதே இவர் பொலன்னறுவையிலிருந்து கல்குடா நோக்கி கேரளா கஞ்சாவினை எடுத்து வரும் வழியில் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார். இவரிடமிருந்து சுமார் 3 கிலோ கிராம் நிறையுடைய இரு கேரளா கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தொடர்ச்சியாக கேரளா கஞ்சாவினை கல்குடாவுக்கு கடத்தி வந்திருக்கலாம் என்ற சந்தேகம் நிலவுவதுடன், பிரதான வினியோகத்தராகவும் செயற்பட்டு வந்துள்ளமை முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாக புலனாய்வுப்பிரிவு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன், நீதிமன்ற நடவடிக்கைக்காக ஆஜர்படுத்தப்படவுள்ளார்.



# பொருளாதார நெருக்கடியினால் சிக்கித் தவிக்கும் தாய்மாருக்கு உலருணவு உதவி



(வி.ரி. சகாதேவராஜா)

சமகால பொருளாதார நெருக்கடியினால் சிக்கி தவிக்கும் ஒரு தொகுதி நலிந்த தாய்மாருக்கு பிரபல சமூக சேவையாளரும் காரைதீவு பிரதேச சபை தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் உலருணவு பொதிகளை வழங்கி வைத்தார். திருக்கோவில் பிரதேசத்தில் பின்தங்கிய விநாயகபுரம் பாலக்குடா போன்ற பகுதிகளில் வசிக்கும் மிகவும் கஷ்டப்பட்ட 100 தாய்மார்களுக்கு குறித்த பொதிகள் நேற்று மாலை வழங்கி வைக்கப்பட்டது.

அச்சமயம் சமூக செயற்பாட்டாளர் வி.ரி. சகாதேவராஜாவும் சமூகமளித்து இருந்தார். கொரோனா காலம் தொடக்கம் இதுவரைக்கும் எமக்கு உலர்உணவு வழங்கி வருகின்ற சமூக சேவையாளர் ஜெயசிறிலுக்கு அந்த மக்கள் நன்றி தெரிவித்தார்கள்.

# அகதி முகாமில் இருக்கும் அனோஜனுக்கு விஜிலென்ஸ் சேவா ரத்னா விருது

(வாஸ் கூஞ்ஞ)



இந்தியாவின் முதல் ஈஸோ தரச் சான்றிதழ் பெற்றுள்ள முன்னணி அரசியல் மற்றும் புலனாய்வு வார இதழான விஜிலென்ஸ் பத்திரிகை தமிழ் நாட்டில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய சாதனைப் படைத்தவர்களில் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து அகதி முகாமில் இருக்கும் இலங்கையரான டேவிட் ஜோன் அனோஜனுக்கும் விருது கிடைக்கப் பெற்றுள்ளது. இந்தியாவின் முதல் ஈஸோ தரச் சான்றிதழ் பெற்றுள்ள முன்னணி அரசியல் மற்றும் புலனாய்வு வார இதழான விஜிலென்ஸ் பத்திரிகை தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளில்சிறந்து விளங்கியஇசாதனைப் படைத்த 25 நபர்கள் தேர்வுசெய்யப்பட்டு அவர்களுக்கான விருதுகள் கடந்த வாரம் வழங்கப்பட்டன.

இதில் தமிழ்நாட்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ள கஸ்தம்பாடி இலங்கைத் தமிழர் முகாமில் வசித்து வரும் டேவிட் ஜோன் அனோஜன் என்பவருக்கு 2022 ஆம் ஆண்டுக்கான விஜிலென்ஸ் சேவா ரத்னா விருது வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து தமிழகத்தில் உள்ள மறுவாழ்வு முகாம்களில் வசித்துவரும் தமிழ் மக்களின் நலனுக்காக ஒரு சமூக ஆர்வலராக பல்வேறு விதங்களில் தொடர்ந்து செயல்பட்டு வருவதை பாராட்டியும்இ புலம்பெயர்ந்து வாழ்ந்துவரும் இலங்கைத் தமிழர்களின் இந்திய குடியுரிமைக்காக தொடர்ந்து அரசிடமும் அரசியல் கட்சி பிரமுகர்களிடமும் வலியுறுத்தி செயல்பட்டு வருவதையும்இ பொதுநல அமைப்புகளுடன் சேர்ந்து மாணவர்கள் உயர்கல்வி பெறுவதற்கு உரிய வழிகாட்டுதல்கள் மற்றும் உதவிகளை செய்து வருவதையிட்டும்இ இலங்கைத் தமிழர்கள் மட்டுமின்றி இந்தியத் தமிழர்களுக்கும் பலவிதங்களில் சேவையாற்றி வருவதை பாராட்டியும் இவருக்கு இந்தாண்டுக்கான விஜிலென்ஸ் சேவா ரத்னா விருது வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விருதினை தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு செஞ்சி கே.எஸ்.மஸ்தான்இ தமிழ்நாடு பால்வளம் மற்றும் பால்பண்ணை வளர்ச்சித்துறை அமைச்சர் மாண்புமிகு சா.மு.நாசர்இ தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் மா.மதிவேந்தன்இ தமிழ்நாடு போலீஸ் அகாடமியின் துணை இயக்குனர் டாக்டர் இரா. சிவக்குமார் ஐபிஎஸ்இ ரெட்ஹில்ஸ் காவல் துணை ஆணையர் திரு.எம்.மணிவண்ணன் ஐபிஎஸ் ஆகியோர் கரங்களால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இந்த விருது வழங்கும் விழாவில் அரசு உயர் அதிகாரிகள்இ சினிமா பிரபலங்கள்இ சமூக ஆர்வலர்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளனர். தமிழக மறுவாழ்வு முகாமில் வசித்துவரும் டேவிட் ஜோன் அனோஜனுக்கு அவரது சேவைகளைப் பாராட்டி தேசத்தின் அடையாளம் என பாராட்டி சமூக சேவகர் விருதும் இவ்வாண்டில் வழங்கப்பட்டுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# உள்ளூர் கைத்தொழிலாளர்களின் உற்பத்திகளை மேம்படுத்துவதன் மூலம் நாட்டுக்கு தேவையான டொலர்களை பெற்றுக் கொள்ள முடியும்



(சர்ஜுன் லாபீர்)

எமது நாட்டில் உள்ளூர் மூலவளங்களை மூலம் உற்பத்திகளை மேற்கொள்ளும் உற்பத்தியாளர்களை மேம்படுத்தி சர்வதேச ரீதியில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு நாட்டுக்கு தேவையான டொலர்களை பெற்றுக் கொள்ள முடியும் என அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் தெரிவித்தார்.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் "சுயமாக முன்னேற முனையும் மனிதர்கள்" எனும் நோக்கினை அடிப்படையாக கொண்டு அம்பாறை மாவட்டம் முழுவதும் சிறுதொழில் முயற்சியாளர்களின் திகாமடுல்ல முயற்சியாண்மை வர்த்தக கண்காட்சி நேற்று(23) கல்முனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்...

இக் கண்காட்சி ஊடாக விற்பனை சந்தைவாய்ப்புகளை முன்னெடுத்து செல்வதற்கான ஏற்பாடாக இது அமைந்து இருக்கின்றது. இந்த விற்பனை கண்காட்சியில் உள்ள உற்பத்தியாளர்களை தரப்படுத்தலுக்கு உட்படுத்தி இலங்கையில் SLS தர நிர்ணய சான்றிதழ் பெறுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். குறிப்பாக நெசவுத் தொழில் உற்பத்தியாளர்களின் உற்பத்திகள் சர்வதேச ரீதியாக பெறுமதி வாய்ந்தவை. எனவே அந்த உற்பத்திகளை சர்வதேச ரீதியிலான விற்பனை தொடர்புகளையும் உரிய சந்தை வாய்ப்புக்களையும் பெற்றுக் கொடுப்பது முக்கிய விடயமாக உள்ளது.

எமது நாடு இயற்கை வளங்கள் கூடுதலாக நிறைந்து காணப்படுகின்ற நாடாகும். அந்த இயற்கை மூலவளங்களை வைத்து தரம் வாய்ந்த பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும் அதன் மூலம் எமது நாட்டுக்கு தேவையான டொலர்களை பெற்றுக் கொள்ள சர்வதேச ரீதியாக ஏற்றுமதி நடவடிக்கைகளை செய்து நாட்டுக்கு தேவையான டொலர்களை பெற்றுக் கொடுப்பதன் ஊடாக எமது நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து பாதுகாத்து அபிவிருத்தி செய்ய முடியும்.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் பொருட்களை கொள்வனவு செய்வதனை குறைத்து எமது நாட்டுக்குரித்தான மூலவளங்களைக் கொண்டு நாட்டின் இன்றைய இன்றியமையாத தேவையினை உள்ளூர் உற்பத்தியாளர்களைக் கொண்டு நிறைவு செய்து கொள்ள முடியும் என குறிப்பிட்டார். எமது மக்களின் எதிர்பார்ப்பாக உள்ள விடயம் யாதெனில் உள்ளூர் உற்பத்தியாளர்களின் தரமான உற்பத்திகளுக்கு ஏற்ற விலை நிர்ணயமும் பொருட்களின் தர நிர்ணயமும் சிறப்பாக இருக்க வேண்டும் என நுகர்வோர் எதிர்பார்க்கின்றார்கள் அதற்கு ஏற்றால் போல் உற்பத்தியாளர்களும் தங்களுடைய உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டு இருந்தார்.

மேலும் இந் நிகழ்வில் அதிதிகளாக கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் லசந்த புத்திக,கல்முனை பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் அதிகாரி என். ஆர்.ரம்சீன் பக்கீர்,அம்பாறை மாவட்ட சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் உதவி பணிப்பாளர் ஐ.எம் நாசர், கல்முனை பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜெஸபர்,பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் கே.எல் யாசீன் பாவா,மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம் பாரூக்,சிறுதொழில் முயற்சியாண்மை பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எச்.எல்.ஏ ஜலீல், டி. லாவனியா, கே.நிரோஜினி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# மண்முனை பிரதேச சபையின் புதுக்குடியிருப்பு உப அலுவலக கட்டடத் திறப்பு விழா



இ.சுதாகரன்

மண்முனை பிரதேச சபையின் கீழ் இயங்கும் புதுக்குடியிருப்பு உப அலுவலகம் நீண்ட காலமாக செயற்பாடு அற்ற நிலையில் காணப்பட்டமை உணர்ந்த பிரதேச சபையின் கௌரவ தவிசாளர். ந.தயானந்தன் அவர்களின் அயராத முயற்சியால் உலக வங்கியின் நிதி உதவியினூடாக செயற்படும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான உதவித்திட்ட நிதியின் கீழ் ஒரு மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட கட்டடமானது மக்கள் பாவனைக்காக அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

சபையின் கௌரவ தவிசாளர் ந.தயானந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உப தவிசாளர் மா.சுந்தரலிங்கம் கௌரவ உறுப்பினர்கள்,செயலாளர்.ஜே. சர்வேஸ்வரன்,சனமூகஅபிவிருத்தி உத்தியோகத்தர் மா.கருணாநிதி,அலுவலக உத்தியோகத்தர்கள் ,கிராம மட்ட அமைப்புக்களின் பிரதி நிதிகள் பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். இதன் மூலம் கிரான்குளம் ,புதுக்குடியிருப்பு ,தாழங்குடா கிராமங்களை உள்ளடக்கிய 9கிராம சேவகர் பிரிவு மக்கள் பயனடையவுள்ளனர்.மக்களின் தேவைகளை உணர்ந்து அவர்களின் காலடிக்கு சென்று சேவையினை வழங்குவதற்கு முன்வந்த அனைவருக்கும் பொதுமக்கள் நன்றியினை தெரிவிக்கின்றனர்.

# குச்சவெளியில் தேசிக்கன்றுகள் வழங்கி வைப்பு

ஹஸ்பர்

திருகோணமலை , குச்சவெளி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உணவு உற்பத்தி மற்றும் பசுமைப் புரட்சிக்கான கொள்கை பிரகடனத்திற்கமைய இரண்டு கிராம சேவகர் பிரிவில் ( பெரியகுளம், இக்பால்நகர்) வசிக்கும் குடும்பங்களுக்கு 4000 தேசி கன்றுகள் நேற்று (23) வழங்கப்பட்டது. குச்சவெளி பகுதியின் மண் வளமானது குறித்த பயிர்ச் செய்கைக்கு உகந்தது இதனால் அப்பகுதி மக்களை உணவு உற்பத்தியிலும் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கிலும் இவ்வாறான திட்டம் நடை முறைப்படுத்தப்படுகிறது.இதற்கான திட்டத்தை நடை முறைப்படுத்த பிரதேச செயலாளர் முஸ்லிம் எயிட் நிறுவனத்துக்கு கோரிக்கை விடுத்திருந்தார்.





முஸ்லிம் எயிட் நிறுவனம் ஊடாக வழங்கப்பட்ட குறித்த நிகழ்வில் குச்சவெளி பிரதேச செயலாளர் கே.குணநிதன், கிராம அதிகாரிகள்,பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,மற்றும் முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், பள்ளி நிருவாகிகள், கோவில் நிருவாகிகள் ,பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர்.

"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

# பல்லின சமய தலைவர்களுக்கும் சமய பாட ஆசிரியர்களுக்குமான ஒரு நாள் செயல் அமர்வு



திருமலை ரவ்பீக் பாயிஸ்

திருகோணமலை எகெட் கரிதாஸ் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பல்லின சமய தலைவர்களுக்கும் சமய பாட ஆசிரியர்களுக்குமான ஒரு நாள் செயல் அமர்வு இன்று (24) காலை 09 மணி தொடக்கம் மூர் வீதியில் அமைந்துள்ள ஜுபிலி மண்டபத்தில் இடம் பெற்றது. இதற்கு வளவாளராக அருட்தந்தை அலெக்ஸ், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் திரு ரவிச்சந்திரன், அருட்தந்தை சுகனேந்திரன் குரூஸ் ஆகியவர்கள் கலந்து கொண்டனர். சமய விழுமியங்கள் மற்றும் சிறுவர் இளைஞர்கள், பாதுகாப்பு தொடர்பாகவும் குடும்ப சகவாழ்வு நாட்டின் அபிவிருத்திக்கு சக்தியாக அமையும் என கருத்துரைத்தனர் இதில் இந்து இஸ்லாமிய கத்தோலிக்க ஆசிரியர்களும் சமய தலைவர்களும் கலந்து சிறப்பித்தனர்.